# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8075291

C

1. District : கோயம்புத்தூர் மாவட்டம் PS: லஒ.த.க காவல்நிலையம் பிரிவு Year: 2020 ஆண்டு FIR No.: 13/2020/AC/CB மு.த.அ. எண் Date: 12.12.2020 நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7(a), 7(A)

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.12.2020 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 04.00 hrs Time to : நேரம் வரை 10.00 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2020 Time : நேரம் 15.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD.VOL-II Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம் (கணினி தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் போக்குவரத்து சோதனை சாவடி, கோபாலபுரம், பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி சுமார் 60 கி.மீ தென் மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.S.இரத்தினம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M.சாமிநாதன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54/2020 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் மாவட்ட நிலை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர் (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   (1) திரு.C.செந்தில்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-II), கோபாலபுரம் ஒருங்கிணைந்த சோதனை சாவடி, பாலக்காடு மெயின் ரோடு, பொள்ளாச்சி.
   (2) திரு.V.ஸ்ரீகாந்த், உதவியாளர் -do-
   (3) திரு.M.மாரி, S/o.மணிகுரி, கதவு எண் 1/50, பிள்ளையார் ரோடு, அம்பராம்பாளையம், வடக்கு, பொள்ளாச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   – தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12.12.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12/12/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 12.12.2020

Name: பெயர் R. [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ........
[illegible]
12.12.2020.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**Continuation of the FIR in Coimbatore V&AC Cr.No.13/2020/AC/CB u/s. 7(a), 7(A) of the PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.**

இன்று 12.12.2020-ம் தேதி 15.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.S.இரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர் கோயம்புத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். Cr.No.13/2020/AC/CB u/s. 7(a), 7(A) of the PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 - ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின் வருமாறு அனுப்புனர் S.இரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்/வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.701/2020/ஜ1 நாள் 12.12.2020 அம்மையீர் பொருள் திடீர் தணிக்கை - கோவை மாவட்டம்- போக்குவரத்து சோதனைச்சாவடி, கோபாலபுரம், பொள்ளாச்சி - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல் நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக. கோவை மாவட்டம், போக்குவரத்துத்துறை, பொள்ளாச்சி பாலக்காடு மெயின்ரோட்டிலுள்ள கோபாலபுரம் போக்குவரத்து சோதனைசாவடியில் பணிபுரியும் அலுவலர்கள் சோதனை சாவடியை கடந்து செல்லக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்தல், தற்காலிக உரிமம் (Temporary Permit) வழங்குதல் E-Way Bill மற்றும் Trip Sheet, ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச் சாவடி சீல் வைக்கவும், வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில் S.இரத்தினம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், கோவை மாவட்டம் மற்றும் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் மேற்படி சோதனைச் சாவடியை இன்று 12.12.2020-ம் தேதி அதிகாலை 04.00 மணியளவில் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி சோதனைசாவடி பொள்ளாச்சி - பாலக்காடு மெயின் ரோட்டில் கிழ மேற்கு

சாலையில் தென்புறமாக வடக்கு பார்த்த நுழைவுவாயிலுடன் கூடிய கான்கிரீட் கட்டிடத்தில் அமைந்துள்ளது. சோதனைசாவடிக்குள் நுழைந்தவுடன் பிரதான ஹால் ஒன்று உள்ளது. இந்த பிரதான ஹாலுக்கு தென் புறமாக வடக்கு பார்த்த நுழைவாயிலுடன் கூடிய பதிவறை/ஓய்வறையும், அதனை ஒட்டி கிழக்கு பார்த்த வாயிலுடன் கூடிய மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) அவர்களின் அறையும் அதனுள் தென் மேற்கு மூலையில் வடக்கு பார்த்த வாயிலுடன் கூடிய கருவூல அறையும் உள்ளது. சோதனைச்சாவடிக்கு முன்புறம் சாலையின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு நபர் சோதனைசாவடியை கடந்து கேரளா நோக்கி செல்லும் வாகனங்களையும், பொள்ளாச்சியை நோக்கி வரும் வாகனங்களையும் தடுத்து நிறுத்தி E-Way bill மற்றும் Trip Sheet-ல சீல் வைக்க செல்லும் வாகன ஓட்டுனர்கள் கிளீனர்களிடம் மாமூலாக பணத்தை கொடுத்துவிட்டு செல்லும் படி அறிவுறுத்தியும் அப்போது வாகன ஓட்டுனர்கள் கிளீனர்கள் சோதனை சாவடியில் மாமூல் பணத்தை கொடுத்து பில் மற்றும் ட்டிரிப் ஷீட்டில் சோதனை சாவடியில் சீல் பெற்றுக்கொண்டு வந்த பின்னரே அவர்களது வாகனத்தை தொடர்ந்து இயக்க அனுமதித்துகொண்டிருந்தார். அப்போது சோதனைச்சாவடியின் முன்புற வாசலில் நின்று கொண்டிருந்தவரிடம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தன்னையும் உடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு திடீர் தணிக்கைக்காக வந்துள்ள விபரம் தெரிவித்து அவரை பற்றி விசாரிக்க அவரது பெயர் R.பஞ்சலிங்கம் என்றும், தான் கோபாலபுரம், க.எண் 2/6-ல் குடியிருக்கும் ராசப்பகவுண்டரின் மகன் என்றும் தெரிவித்தவரை போக்குவரத்து துறை சோதனைசாவடிக்குள்ளே அழைத்து வந்த போது சோதனை சாவடியின் கவுண்டருக்கு முன்பிருந்து திரும்பிவந்து கொண்டிருந்த 3 நபர்களிடமும் மற்றும் கவுண்டரை நோக்கி சென்ற 2 நபர்களிடமும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் தங்களை அறிமுகம் செய்து கொண்டு மேற்படி நபர்களையும் போக்குவரத்து சோதனைச் சாவடிக்குள்ளே அழைத்துவரப்பட்டு அவர்களை அமரவைக்கப்பட்டது. சோதனை சாவடிக்குள் பிரதான ஹாலில் உள்ள E-way bill மற்றும் Trip sheet சோதனைச்சாவடி சீல் வைக்கும் கவுண்டரில் ஒரு நபர் அமர்ந்துகொண்டு சீல் வைத்துகொண்டிருந்தார் அவரைபற்றி விசாரிக்க அவரது பெயர் M.நாசர் என்றும், சோதனைச்சாவடியின் உதவியாளர் திரு.ஸ்ரீகாந் அவர்கள் பாத்ரூம் சென்றிருப்பதால் நான் சோதனைச்சாவடியின் முன்புறமாக வாகனங்களை

நிறுத்திகொண்டிருந்தை விட்டுவிட்டு சீல் போட வந்தேன் என்று கூறினார். ஹாலின் தென்புற அறையில் யூனிபாம் அணிந்திருந்த ஒரு நபர் அமர்ந்திருந்தார், ஓய்வறையை ஒட்டி இருந்த அறையில் மற்றொரு நபர் அமர்ந்திருந்தார். மேற்படி இருவரிடமும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தன்னையும் உடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் குழுவினரை அறிமுகம் செய்து வைத்து திடீர் தணிக்கைக்காக வந்துள்ள விபரத்தை தெரிவித்தும் தங்களை சுயபரிசோதனை செய்து தங்களிடம் பணம் ஏதும் இல்லை என்று வெளிப்படுத்தி கொண்டு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி யூனிபாம் அணிந்து அமர்ந்திருந்த அலுவலரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் C.செந்தில்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத) என்றும், தான் கடந்த 28.09.2020-ம் தேதி முதல் கோபாலபுரம் போக்குவரத்து சோதனைசாவடியில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தும், நேற்று 11.12.2020-ம் தேதி காலை 8.00 மணிக்கு பணிக்கு வந்ததாகவும், இன்று 12.12.2020-ம் தேதி காலை 08.00 மணி வரை சுழற்சி முறையில் பணியில் தானும், 11.12.2020-ம் தேதி காலை 08.00 மணி முதல் அன்றைய இரவு 8.00 மணிவரை அலுவலக உதவியாளர் திரு.சுப்பிரமணியமும், 11.12.2020-ம் தேதி இரவு 8.00 மணி முதல் மறுநாள் காலை 08.00 மணிவரை உதவியாளர் திரு.ஸ்ரீகாந்த் அவர்களும் சுழற்ச்சி முறையிலும், தனிநபர்களான திரு.நாசர் மற்றும் திரு.பஞ்சலிங்கம் ஆகியோர்களும் பணியில் இருப்பதாக தெரிவித்தார். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. C.செந்தில்குமாரிடம் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேடு பற்றி விசாரிக்க அவர் அதை எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில் 11.12.2020-ம் தேதி இரவு பணியில் மோட்டார் வாகன ஆய்வாளர் ரூ.2,100/-ஐ வைத்திருப்பதாகவும், உதவியாளர் திரு.ஸ்ரீகாந்த், ரூ.300/-ஐ வைத்திருப்பதாகவும், பதிவு செய்து கையொப்பம் செய்யப்பட்டிருந்தது. பின்னர் சோதனைச்சாவடி சீல் வைக்கும் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.நாசருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த Plastic Box-ல் ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. பணத்தை பற்றி அவரிடம் கேட்க, சற்று முன்பு வரை திரு.ஸ்ரீகாந்த் அவர்கள் சீல் வைத்து மாமுல் பணம் வசூல் செய்து கொண்டிருந்ததாகவும், அவர் பாத்ரூம் சென்றுவிட்டதால் தான் தற்போது சீல் வைத்து மாமுல் பணம் வசூல் செய்துகொண்டிருப்பதாகவும் கூறி எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிபார்க்க அதில் ரூ.6,470/- (500 X 6 = 3,000/- , 200 X8= 1,600/-, 100 X 12 = 1,200/-, 50 X 13 = 650/- , 10 X 2=20/-) இருந்தது. மேற்படி பணம்

ரூ.6,470/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அமர்ந்திருந்த டேபிளில் சற்று திறந்திருந்த வலது டிராயரை பார்த்போது அதில் கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுகள் இருந்தன. மேற்படி பணத்தை பற்றி விசாரித்தபோது, அவர் நேற்று இரவு 8.00 மணி முதல் இன்று காலை 3.00 மணி வரை சோதனைச்சாவடிக்கு சீல் பெற்றுசெல்ல வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் மாமூலாக கொடுத்த பணத்தை உதவியாளர் திரு.ஸ்ரீகாநத் வசூல் செய்து கத்தையாக வைத்து அவ்வப்போது என்னிடம் கொடுப்பார், அதை நான் வாங்கி எனது டேபிளின் வலது டிராயரில் வைத்துள்ளேன் என்று கூறி ஐந்து கத்தைகளாக ஆஜர் செய்த பணம் இருந்தது. அதில் மூன்று கத்தையில் தலா ரூ.4,000/-மும் ஒரு கத்தையில் ரூ.15,800/-ம் மற்றொரு கத்தையில் ரூ.2,800/-மும் ஆக மொத்தம் ரூ.30,600/- (2000 X 2 = 4,000/-, 500 X 22 = 11,000/- , 200 X20= 4,000/-, 100 X 69 = 6,900/-, 50 X 94 = 4,700/-) ஆகமொத்தம் ரூ.30,600/- ஆக இருந்தது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.30,600/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் வேறு பணம் பற்றி விசாரிக்க மோட்டார் வாகன ஆய்வாளர் தானாக முன்வந்து தனது பேன்ட்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்த கத்தையாக பணத்தையும், தனியாக மடித்து வைக்கப்பட்டிருந்த சில ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை எண்ணிபார்க்க கத்தையாக இருந்ததில் ரூ.10,190/-ம், மடித்து வைக்கப்பட்டிருந்ததில் ரூ.2,100/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க மேற்படி பணம் ரூ.10,190/- நேற்று காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை சோதனைச்சாவடியில் சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடமிருந்து வசூல் செய்த மாமூல் பணம் என்று கூறினார். மேற்படி பணம் ரூ.10,190/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மடித்து வைக்கப்பட்டிருந்ததில் ரூ.2,100/-ஐ பற்றி அவரிடம் கேட்டபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்று கூறியதால் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேட்டினை பார்வையிட்டு சரிபார்த்து மேற்படி பணம் ரூ.2,100/-ஐ அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் ஓய்வறையினுள் இருந்த நபரை பற்றி விசாரிக்க அவரது பெயர் V.ஸ்ரீகாந்த் என்றும், தான் கடந்த 14.10.2020-ம் தேதி முதல் இந்த சோதனைச்சாவடியில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், நேற்று 11.12.2020-ம் தேதி இரவு 8.00 மணிக்கு அன்று காலையில் பணியில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.சுப்பிரமணியத்தை ரிலீவ் செய்து தான் 11.12.2020-ம்

தேதி இரவு 8.00 மணியில் இருந்து பணியில் இருந்து வருவதாகவும், வாகனங்களுக்கு தற்காலிக பர்மிட் மற்றும் வாகனத்திற்கு வரி போடுவதற்காக வரும் நபர்களிடமிருந்து பணம் வசூல் செய்து இரசீது போட்டு கொடுப்பது தனது வேலையாகும் என்றும், நேற்று 11.12.2020-ம் தேதி இரவு பணியில் இருந்து இன்று 12.12.2020-ம் தேதி காலை 03.00 மணி வரை சீல் வைக்கும் பணியை செய்து வருவதாகவும், தற்போது சோதனைச்சாவடியின் முன்புறம் நின்றுகொண்டு வாகனத்தை நிறுத்திகொண்டிருந்த திரு.நாசரை சீல் வைக்கச்சொல்லிவிட்டு தான் பாத்ரூம் சென்றதாக கூறினார். மேலும் நேற்று இரவு 8.00 மணி முதல் இன்று காலை 08.00 மணிவரை வசூல் ஆகும் மாமுல் தொகையில், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களுக்கு 70%-மும் எனக்கு 30%-ம் பணிமுடித்து செல்லும்போது பிரித்துகொள்வோம் என்றும், அந்த வகையில் நேற்று இரவு 8.00 மணி முதல் இன்று காலை 03.00 மணி வரை வசூல் செய்த மாமுல் பணத்தை அவ்வப்போதே கத்தையாக்கி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் தான் கொடுத்ததாகவும், அவர் அதை வாங்கி அவர் அமர்ந்திருந்த டேபிளின் வலது புற டிராயரில் வைத்துகொண்டதாகவும் தெரிவித்தார். மேலும் 3 மணி முதல் தாங்கள் திடீர் தணிக்கை வருவதற்கு முன்பு வரை வசூல் செய்யப்பட்ட மாமுல் பணத்தை வாங்கி சீல் வைக்கும் டேபிளின் மேல் வைக்கப்பட்டிருந்த Plastic Box-ல் போட்டு வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவரிடம் பணம் பற்றி விசாரிக்க தன்னிடம் ரூ.300/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்று கூறியதால் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேட்டினை பார்வையிட்டு சரிபார்த்து மேற்படி பணம் ரூ.300/-ஐ அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. சீல் வைக்கு மேஜையில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க அவரது பெயர் நாசர் என்றும், தான் 4 வருடங்களாக கோபாலபுரம் போக்குவரத்து சோதனைச்சாவடியில் அதிகாரிகளின் உத்திரவுப்படி சோதனைச்சாவடியை கடந்து செல்லும் வாகனங்களை தடுத்து நிறுத்தி சோதனைச்சாவடிக்கு அனுப்பிவைக்கும் பணியை தினக்கூலிக்கு செய்து வருவதாகவும், இதற்கான கூலியாக அன்றன்றைக்கே பணிமுடித்து செல்லும்போது ரூ.500/- மோட்டார் வாகன ஆய்வாளர் எனக்கு தருவார் நான் பெற்றுக்கொள்வேன். மேலும் அவரிடம் வேறு பணம்பற்றி விசாரிக்க அவர் தனது சட்டையின் மேல் பாக்கெட்டில் இருந்து ரூ.2,940/-ஐ (500 X 2 = 1,000/- , 200 X3= 600/-, 100 X 12 = 1,200/-, 50 X 1= 50/-, 20 X 1= 20/-, 10 X 7= 70/-) எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி

பணத்தை பற்றி அவரிடம் விசாரிக்க தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.2,940/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சோதனைச்சாவடியில் முன்புறம் நின்று வாகனத்தை நிறுத்திகொண்டிருந்த நபரைபற்றி விசாரிக்க அவரது பெயர் பஞ்சலிங்கம் என்றும், தான் 4 மாதங்களாக கோபாலபுரம் போக்குவரத்து சோதனைச்சாவடியில் அதிகாரிகளின் உத்திரவுப்படி சோதனைச்சாவடியை கடந்து செல்லும் வாகனங்களை தடுத்து நிறுத்தி சோதனைச்சாவடிக்கு அனுப்பிவைக்கும் பணியை தினக்கூலிக்கு செய்து வருவதாகவும், இதற்கான கூலியாக அன்றன்றைக்கே பணிமுடித்து செல்லும்போது ரூ.250/- மோட்டார் வாகன ஆய்வாளர் எனக்கு தருவார் நான் பெற்றுக்கொள்வேன் என்று கூறினார். மேலும் அவரிடம் வேறு பணம்பற்றி விசாரிக்க அவர் ரூ.50/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தைபற்றி அவரிடம் விசாரிக்க மேற்படி பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து உதவியாளர் திரு.ஸ்ரீகாந்த் அவர்களிடம் வாகன தற்காலிக பர்மிட் மற்றும் வாகன வரி விதித்த வகையில் பெறப்பட்ட பணம் பற்றி விசாரித்து அலுவலக கணக்குகளை சரிபார்த போது அலுவலக பெட்டகத்தில் ரூ.56,320/-இருந்தது. அந்த தொகையை பற்றி அவரிடம் கேட்ட போது அந்த தொகை வாகனங்கள் அரசுக்கு செலுத்தும் வரி வசூல் தொகை என்றும் தெரிவித்தார். மேற்படி தொகைகளை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த பண பதிவேட்டிலிருந்த பதிவுகளுடன் ஒப்பிட்டு சரிபார்த்த போது மேற்படி தொகை 11.12.2020 அன்று காலை 08.00 மணி முதல் 12.12.2020-ம் தேதி காலை 04.00 மணி வரை வசூல் செய்யப்பட்ட அரசு கட்டணம் சரியாக இருந்ததால் மேற்படி தொகையை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அவர்களிடம் இருந்து கீழ்கண்ட ஆவணங்கள் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 1. தினசரி கணக்கு பதிவேடு நாள் 09.11.2020 முதல் 11.12.2020-ம் தேதி வரை (பக்கம் 1 முதல் 65 வரை எழுதப்பட்ட பதிவேட்டின் பக்கம் எண்-65), (2). வருகை பதிவேடு 2020 பதிவேட்டில் டிசம்பர் மாத பதிவு (பக்கம் 1 முதல் 68 வரை எழுதப்பட்டதில் பக்க எண் 48 & 49), (3). கையிருப்பு பதிவேடு 2020 (பக்கம் 1 முதல் 76 வரை எழுதப்பட்டதில் பக்க எண் 76), (4). அலுவலர் தினசரி பணிவிபரப்பதிவேடு (பக்கம் 1 முதல் 79 வரை எழுதப்பட்டதில் பக்க எண் 78 & 79), மேலும் திடீர் தணிக்கைக்கு வந்த சமயத்தில் மேற்படி சோதனை சாவடியில் சீல் வைத்து மாமுல் பணம் கொடுத்து திரும்ப சென்ற 3 நபர்களில் திரு.செந்தில்குமார் வயது 39/2020,

த/பெ. திரு.கணேஷன், கதவு எண்- 5/39, தெற்கு அரூர், நாமக்கல் தாலுகா, ஆலம்பட்டி போஸ்ட், நாமக்கல் மாவட்டம், என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க இன்று Invoice -ல் சீல் வைக்க ரூ.200/- கொடுத்ததாகவும், TN 28 BA 2225 வாகன பதிவுச் சான்று, அவரது ஓட்டுநர் உரிமம், GST Invoice மற்றும் Weigh Bridge Authority Slip ஆகியவற்றின் நகல்களை ஆஜர்படுத்தியதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 2) திரு.மணிவேல் வயது 38/2020, த.பெ .திரு.கருப்பன் கதவு எண்- 3/103-B, புத்தூர் போஸ்ட், ஆத்தூர் தாலுகா, சேலம் மாவட்டம், என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க இன்று Invoice -ல் சீல் வைக்க ரூ.100/- கொடுத்ததாகவும், மேலும் TN 30 BM 5601 வாகன பதிவுச் சான்று, ஓட்டுநர் உரிமம், இன்சூரன்ஸ் மற்றும் GST, Invoice ஆகியவற்றின் நகல்களை ஆஜர்படுத்தியதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 3)திரு.M.பொன்னம்பலம், வயது-47/2020, த/பெ.திரு.முத்துச்சாமி, கதவு எண்- 2/84, காளிச்செட்டிப்பட்டி, புதுக்கோட்டை போஸ்ட், நாமக்கல் மாவட்டம், என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க இன்று Invoice -ல் சீல் வைக்க ரூ.100/- கொடுத்ததாகவும், மேலும் TN 28 BB 1395 வாகன பதிவுச் சான்று, எனது ஓட்டுநர் உரிமம், இன்சூரன்ஸ், மற்றும் GST Invoice ஆகியவற்றின் நகல்களை ஆஜர்படுத்தியதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கையின் போது மாமுல் பணத்தை கொடுத்து சீல்வைத்து செல்ல வந்த 2 நபர்களில் 1) திரு. ஜெயராஜ், வயது- 30/2020, த/பெ.திரு.சேகர், கதவு எண்: 356, மெய்க்கல் நாய்க்கன்பட்டி, களத்தூர் ரோடு, முசிறி வட்டம், தொட்டியம் வழி, திருச்சி மாவட்டம், என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க இன்று Invoice -ல் சீல் வைக்க ரூ.200/- கொடுக்க வைத்திருந்ததாக கூறினார். மேலும் KA 16 C 4975 வாகன பதிவுச் சான்று, ஓட்டுநர் உரிமம், இன்சூரன்ஸ், Consignment Note, Tax Invoice மற்றும் இ-வே பில் ஆகியவற்றின் நகல்களை ஆஜர்படுத்தியதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 2) திரு.P.சுதாகர் 31/2020, த.பெ. திரு.M.பொன்னுசாமி கதவு எண்: 6/124, குடி வீதி, கீழக்கண்ணுகுளம், வேங்கை மண்டலம், முசிறி வட்டம், மூவானூர் போஸ்ட், திருச்சீ மாவட்டம், என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க இன்று Invoice -ல் சீல் வைக்க ரூ.200/- கொடுக்கவைத்திருந்ததாக கூறினார். மேலும் TN 32 M 5775 வாகன

பதிவுச் சான்று, ஓட்டுநர் உரிமம், இன்சூரன்ஸ், மற்றும் Tax Invoice ஆகியவற்றின் நகல்களை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி நபர்களை விசாரித்த போது தங்களது வாகனங்களை சோதனை சாவடி அருகில் வரும் போது சோதனை சாவடிக்கு முன்புறமாக நின்று கொண்டிருந்த நபர்கள் தங்களது வாகனங்களை தடுத்து நிறுத்தி தற்காலிக பர்மிட் மற்றும் பில்களில் சீல் வைக்க அறிவுறுத்தியும், அவ்வாறு செல்லும் போது மாமூலாக பணத்தை எடுத்துச் செல்லும்படி அறிவுறுத்தி வந்ததாகவும், அப்போது வாகன ஓட்டுனர்கள், கிளீனர்கள் சோதனை சாவடியில் மாமூல் பணத்தை கொடுத்து தற்காலிக பர்மிட் மற்றும் பில்களில் சோதனை சாவடி சீல் வைத்து வந்த பின்னர் தான் அவர்களது வாகனத்தை மேற்படி நபர்கள் விடுவித்ததாகவும் தெரிவித்தனர். மேலும் சீல் வைக்க சோதனை சாவடிக்கு சென்ற போது அங்கிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் மற்றும் உதவியாளர் திரு.ஸ்ரீகாந்த் ஆகியோர் தங்களிடம் லஞ்சமாக பணம் கொடுத்தால் தான் சீல் வைக்க முடியும் என்று கேட்டதின் பேரில் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து தற்காலிக பர்மிட் மறறும் பில்களில் சீல் பெற்று வந்ததாக தெரிவித்தார்கள். அதனை தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் மற்றும் திரு.நாசர் ஆகியோர்களை திடீர் தணிக்கை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் விசாரித்து தனித்தானியாக வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த திடீர் தணிக்கையின் போது சட்டரீதியாக கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகள் மற்றும் Covid-19-பெருந்தொற்று நோய் தடுப்புக்குண்டான பாதுகாப்பு விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது கோபாலபுரம் சோதனைச்சாவடியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர், உதவியாளர், தனிநபர்கள், வாகன ஓட்டுனர்கள் மற்றும் கிளீனர்கள் ஆகியோர்களை கன்னியமாக நடத்தப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அலுவலக கையிருப்பு பணம் முழுவதையும் காலை 08.00 மணிக்கு மாற்று பணிக்காக வந்த திரு.V.பாலு, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத) மற்றும் திரு.சுகுமாரன் உதவியாளர் ஆகியோர் சரி பார்த்து பெற்று கொண்டார்கள். சோதனை சாவடியில் பணிகள் வழக்கம் போல் நடைபெற அறிவுரை கொடுக்கப்பட்டு பணிகள் வழக்கம்போல் நடைபெற்றது. இந்த திடீர் சோதனையானது இன்று 12.12.2020-ம் தேதி காலை 10.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் இந்த திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து

விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். திடீர் தணிக்கையின் போது திரு.C.செந்தில்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), திரு.V.ஸ்ரீகாந்த், உதவியாளர் போக்குவரத்து சோதனைச்சாவடி, கோபாலபுரம், பொள்ளாச்சி மற்றும் திரு.M.நாசர், த/பெ.மன்சூர், க.எண்.1/50, மீன்கரை ரோடு, அம்பராம்பாளையம், சுங்கம், பொள்ளாச்சி(தனிநபர்) ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.50,200/-, கைப்பற்றப்பட்ட சான்றொப்பமிட்ட ஆவணங்கள் மற்றும் திரு.C.செந்தில்குமார், திரு.M.நாசர் ஆகியோரது வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். மேலும் 1) திரு.C.செந்தில்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத), கோபாலபுரம் போக்குவரத்து சோதனை சாவடி, பாலக்காடு மெயின் ரோடு, பொள்ளாச்சி, 2) திரு.V.ஸ்ரீகாந்த், உதவியாளர், கோபாலபுரம் போக்குவரத்து சோதனைச்சாவடி, பாலக்காடு மெயின் ரோடு, பொள்ளாச்சி மற்றும் 3) திரு.M.நாசர், த/பெ.மன்சூர், க.எண்.1/50, மீன்கரை ரோடு, அம்பராம்பாளையம், சுங்கம், பொள்ளாச்சி (தனிநபர்) ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (Sdxxxxx) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்/வட்டாட்சியர், கோயம்புத்தூர். இணைப்பு:- 1)நடவடிக்கை குறிப்புகள், 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.50,200/-, 3)கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், 4)பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் Madam, received the complaint along with proceedings, Cash Rs.50,200/-, Documents, Statements on 12.12.2020 at about 15.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.13/2020/AC/CB u/s. 7(a), 7(A) of the PC Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 (Sd.xxxxx) R.Ezhilarasi, (12.12.2020) Inspr., VAC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

R. [signature] 12/12/2020
(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.